ஓம்

# இந்து சாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

['ரேலிபோன்' இல. 56.]

பத்திரிக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ 6-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைப்பகுதி: " ரூ. 9-00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

உ
சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேக்கச், சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப், பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாகமத் தினிது தாங்கப், பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்தவறிவிச்சைதொழிலென்றோது, மதம்பூத்தவிநாயகன் றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருவசம் ரூ
" அரைக்கலம் ரூ
" கால்கலம் ரூ.
அடுத்த முறைகட்கு வேறு விகிதம்...
விளம்பரங்கள் முற்பண மனுப்பிலு...
வெளியிடப்படா.

புத்தகம்—சச. } [யாழ்ப்பாணம்; - ஆங்கிரசஸூ ஆடிமீ உசஉ, (1932 ஆகஸ்ட் 8) திங்கட்கிழமை. { இலக்கம்—

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும்,
ஆன்ற பெருமைதரும்"

## கடவுளின் தன்மை.

(ஸ்ரீமத். சுவாமி ஆத்மானந்தா.)

ஒருவர் சமயசாஸ்திரம் நன்குகற்றுத் தேறிய வல்லுனராகவிருக்கலாம். இன்னொருவர் மாபெரும் ஞானியாகவிருக்கலாம். இன்னொருவர் ஐயந்திரிபற ஒரு விஷயத்தை உணர்த்துவதில் சாமாத்தியம் வாய்ந்த ஆசிரியராகவிருக்கலாம். ஆனல், மேற்சொல்லப்பட்ட சமயசாஸ்திர ஆராய்ச்சியாளரையோ, ஞானியையோ, ஐயந்திரிபறவுணர்த்தும் வல்லமைவாய்ந்த ஆசிரியரையோ ஒருவர் நோக்கி "கடவுள் என்பது என்ன? அவ்வஸ்து எத்தன்மை வாய்ந்தது?" என்று வினவினல் அவர்கள் தக்க விடை பகரவியலாது விழிப்பார்கள். அப்படியின்றி விடையை ஒருவாறு அளித்தாலும், கேட்பவர் கிரகித்துக்கொள்வது மிகவும் கடினமாக இருக்கும். இக்கேள்வியைக் கேட்பது மிக இலகு; ஆனல் அதற்குத் தக்க விடையளிப்பது மிகவும் கடினம். இப்பூவுலகின்கண் உள்ள தோற்றங்கள் யாவற்றையும் நாம் தொகுத்துப் பார்க்கும்போது அவை ஒன்றற்கொன்று வித்தியாசங்காட்டாது பகுத்து நோக்கும்போது வித்தியாசங் காட்டுகின்றன; சக்கர மத்தியொன்றினுக்குள் நாம் செல்லும்போது, சக்கர விட்டங்கள் ஒன்றிற்கொன்றுஉள்ள தூரம் குறைந்து, பின் மத்தியில் இருந்து சக்கரத்திற்கு வரும்போது தூரம் கூடுகின்றது. இதுபோலவே, சிருட்டியின் அமைப்பாகவுள்ள பாகுபாட்டின் ஒற்றுமையிலும் காணலாம். தொகுத்து நோக்கும்போது சிருட்டி செய்யப்பட்டன யாவும் ஒன்றேயென்றும், பகுத்துப் பார்க்கும்போது அவை பேதம்பேதமாகவும் சிக்கலானவையாகவுமிருப்பதைக் காணலாம். குறித்த ஒருசமயவாதிகள்தான் கடவுளை அறிபவர்கள்; அவர்களே கடவுளின்தன்மை இவ்வாறு என்று அறியக்கூடியவர்கள் என்ற வீண் பிதற்றலை நாம் விட்டால், எம்மைச் சுற்றிலுமுள்ளவற்றில் இருந்து நாம் கிரகித்துக்கொண்ட கெட்ட கொள்கைகளைக் காற்றிற் பறக்கவிட்டால், சுயநலங்கருதியாம் இதுகாறும் பின்பற்றிவந்த முறைகளைப் புறக்கணித்தால் எமது சமயக் கொள்கைகளிற் சிக்கலானவை நியனவையாயுள்ளவற்றையெல்லாம் நீக்கிவிட்டால், "கடவுள் என்பது என்ன, அவர் தன்மை எவ்வாறு?" என்ற கேள்விக்கு நாம் விடை பகர்வது மிக்க இலகுவாகவிருக்கும். கடவுள் என்பது என்னவென்றால், அதற்குத் தக்க விடை கடவுள் கடவுளே என்றுதான்சொல்லவேண்டும். இது நியாயமானதும், இயற்கைக் கொத்ததும், தர்க்கரீதியானதுமாகும். இறைவனோடு ஒப்புவமையானது இவ்வுலகிலாவது எவ்வுலகிலாவது ஒன்றுமில்லை அவரை ஒருவர் பார்க்கவும் இயலாது, அறியவும் இயலாது. என, அவர் பார்வைக்கு அல்லது அறிவுக்கு எட்டியவரானல், அவரின் தன்மைகளுக்கு எல்லையை வைத்ததாகும்.

இத்துடன் அவதானிக்க வேண்டியது இன்னென்று உண்டு; நான் இப்போது ஒரு வஸ்துவைப் பார்த்து, அது என்ன, எத்தன்மைத்து என அறியப் பிரயத்தனப்படுகிறேன். இதுவிஷயத்தில், அறியப்படவேண்டிய அல்லது நோக்கப்படவேண்டிய வஸ்து பார்ப்பவன் அல்லது அறிபவனில் இருந்து வித்தியாசமானதாய் அல்லது பிரிவானதாய் இருத்தல் வேண்டும். ஆகவே, பார்ப்பவன அறிபவனுக்கு பார்க்கப்படும் அறியப்படும் வஸ்துவிற்கும் இடையில் ஏதோ ஒன்று இருக்கவேண்டுமென்பது நியாயசாஸ்திர சித்தாந்தம். எனவே, நாம் ஒரு வஸ்துவைப் பார்க்கவேண்டுமாயின், எமக்கும், பார்க்கப்படும் பொருட்கும் இடையேயுள்ள இதன் மூலமாகவே அதனைப் பார்க்கவேண்டியிருக்கிறது ஆகவே நாம் எமது கண்ணிற்குப் புலப்படும் ஒவ்வொரு காட்சியும் இவ்விடைச்சாதனத் தோற்றம் போலவே தோன்றுகிறது அன்றி, காணவேண்டிய வஸ்துவின் உண்மைத் தோற்றம் தோன்றுகிறதில்லை: உண்மையாக, அவ்வஸ்து எத்தன்மைத்து என்பதை நாங்கள் அறிகிறோமில்லை எமக்கும், அதற்கும் இடையேயுள்ள வஸ்துமூலமாக அது தோன்றும் உருவத்தையே நாம் காண்கிறோம். மனிதரின் அறிவு விஷயதிலும் இப்படியே. ஒவ்வொரு மனிதனும் ஒரு வஸ்துவைப் பார்க்கிறபோது அல்லது அறிகின்றபோது தனது மனம்வழியாகவே அப்படிச் செய்கின்றான். அவனுடையமனம் ஓர் தூரதிருட்டிக் கண்ணடிக்கொப்பானதாகும்.

இந்தத் தூரதிருஷ்டிக் கண்ணடி மூலமாக, மனிதன் தன்னைச் சுற்றிலுமுள்ள பொருள்களின் தோற்றத்தைக் காண்பதற்குப் பிரயத்தனப்படுகின்றான். ஆனல் பல்வேறு மனிதரில் பல்வேறு வித்தியாசமான மனப்பான்மையுண்டு. இதனல், ஒருவஸ்து பல்வேறு விதமாகப் பல்வேறு மனிதர் மனதிற்படும். ஒரு புலவன் இருக்கிறான் அவன் ஒரு ரோஸாப் புஷ்பத்தை நோக்குகிறான். அதன் அழகில் அவன் மயங்குகிறான். மனித வாழ்க்கையிற் பிரதானமானவை என்று எண்ணப்படும் உணவை, உடையைக் கனியாட்டை வெறுத்து, அப்புஷ்பத்தையே நோக்கி அதன்மீதே தன் சிந்தனையைச் செலுத்துகிறான். ஆனல், வித்தியாசமான மனப்பான்மையுடைய இன்னொருவன், அந்த புஷ்பத்தைக்கண்டு, வெறுப்புக்கொள்கின்றான். தன்னைப் போல உலகவிவகாரங்களில் ஈடுபட்டு அநுபவிக்கவேண்டியனவற்றை அநுபவியாது, கேவலம் கைவிரல்களுக்கிடையில்வைத்து நசித்துவிடக்கூடிய ஓர் புஷ்பத்தைப் பார்த்து வர்ணித்துப் பாடிக்கொண்டிருக்கும் இப்புலவன் பைத்தியகாரன் அல்லது மூடன் என அவன் எண்ணுகிறான். இதற்கு நியாயம் என்ன? இருவரும் ஒரே புஷ்பத்தைத்தான் நோக்குகின்றனர். எனினும் ஒருவருக்கு அப்புஷ்பம் அழகானதாகவும், மற்றவருக்கு வெறுப்பைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கின்றதே. ஏன்? இவ்விருவரும், வஸ்துவாகிய ரோஸ் புஷ்பத்தைத் தம்மனம் என்னும் தூரதிருஷ்டிக் கண்ணடி மூலமாகப்பார்ப்பதினுலேயே என்க. அப்படிப் பார்ப்பதினல், அப்புஷ்பம் வெவ்வேறு விதமாக அவர்களுக்குத் தோற்றுகிறது. இந்த உலகத்தில் வீண் விவாதமும், ஒற்றுமையின்மையும் இருப்பதற்கும் இதுதான் காரணம் என்க. இது காரணத்தால் ஒருவன் இன்னொருவனேடு அபிப்பிராய பேதம் கொள்கின்றான். ஒரு விஷயத்தில், தான் கொள்ளும் கொள்கையைப் போலவே, இன்னொருவனும் இன்னோர் கொள்கையைக் கொள்ள உரித்துள்ளவன் என்பதையும், தனது மனம் என்னும் கண்ணடி மூலமாகத்தான் பார்ப்பது போலவே இன்னொருவனும், அவனுடைய மனம் மூலமாகப் பார்க்கிறான் என்பதையும் மறந்து தனது கொள்கையே சரி, என்பதை ஸ்தாபிக்க ஒவ்வொருவனும் பிரயத்தனப்படுகின்றான். இதை நாம் எம் ஞாபகத்திருத்தினோமாகில் ஒற்றுமையுண்டு, எல்லோர்கொள்கையும் சரியே என்றுஎண்ணி இப்பிரபஞ்சத்தினின்று மகிழ்வதற்கேதுவாகும் என்பதே என் அபிப்பிராயம் ஏதேனுமொன்றை நாம் நோக்கவிரும்பினல்,- அவ்வஸ்து நோக்குபவனிலிருந்து பிரிவாய் உளதே, எமது மனம் அவ்வஸ்துவின் உண்மையை உள்ள உள்ளவாறு எமக்கு உணர்த்தமாட்டாது (ஏனெனில் அம்மனமே பார்க்கும் பொருளையும் பார்ப்பவனையும்பிரித்து வைக்கின்றது) என்பதை இது விஷயங்களை ஆராய்ந்து சிந்தித்தபின் நாம் நன்கு அறியலாகும். காணப்படும் ஒவ்வொரு வஸ்துவும், பார்ப்பவனுடைய மனத்தின் ஆற்றலுக் கேற்றதாகவிருக்கும். மனிதர் ஒவ்வொருவரின் மனப்பான்கு பல்வேறு வகைப்பட்டிருப்பதால், அவர்கள் கொள்ளும் அபிப்பிராயங்களும் பல்வேறு வகைபபட்டனவாகும்.

சாதாரண விஷயங்கள் இவை இறைவனை அறிவதிலும் இப்படியே. கடவுள் எமயிலிருந்து பிரிவாகவுள்ள ஓர் வஸ்து என்ற எண்ணத்துடன் நாம கடவுளை நோக்க விரும்பினல், அல்லது அறிய விரும்பினல், எமது மனத்தின் மூலமாயே நாம் அதைச் செய்யவேண்டும். ஆகவே, அவரும் எங்கள் மனவாற்றலுக்குத் தக்கவாறு எமக்குத் தோன்றுவார். சிருட்டி முடியும்வரைக்கும் கடவுளைப்பற்றிய மனிதக் கொள்கைகளும் அவ்வம்மனிதரின் மனப்பாங்கிற் கேற்ப வித்தியாசம் வித்தியாசமானவைகளாக விருக்கும். ஏன்? சிருட்டியின் நோக்கம் பாகுபடுத்தலே யென்க. கடவுள் ஒருவர் இருந்தால் அவர் எங்கேயிருக்கிறார்? நாம் ஏன் அவரைப் பார்க்க முடிகின்றதில்லை? என்னும் இன்னோரன்ன வினக்களை மனிதர் சாதாரணமாகக் கேட்கின்றார்கள்.

நாம் கடவுளைக் காணுதிருக்கின்றோமில்லை. எங்கு பார்த்தாலும் அவர் எம்மைச் சூழ இருக்கின்றார். அவர் எங்கும் இருக்கின்றார். அவராற்றான் நாம் இங்கேயிருக்கிறோம். அவரின்றி அணுவு மசையாது என்று நாம் கூறுகிறோம். ஆனல் அவரை நாங்கள் அறிகிறோமென்று மிகவும இலகுவாகச் சொல்லவியலாது. ஏன்? நாங்கள் அவரை எம் மனத்தின் மூலமாகவே அறிகிறோம். எனவே, அவர்எம்மனத்தின் ஆற்றலிற்குத் தக்கவாறாக, விதம்விதமாகத் தோற்றுகிறார்.

வானத்தில் இருந்து சூரியன் தனது பிரபையை வீசுகின்றான். அப்பிரபைக்கு நிறமுண்டா? அல்லது ஆதபனுக்கேனும் நிறமுண்டா? ஆனல் நீலவர்ண மூக்குக் கண்ணடி யணிந்து நோக்குபவர்க்கு அவன நீல நிறமாகவும், பசிய நிற கண்ணடி அணிந்தவர்களுக்குப் பசிய நிறமாகவும், மஞ்சள் வர்ணக் கண்ணடி அணிந்தவர்க்கு மஞ்சள் வர்ணமாகவும் தோற்றுகிறான். அவரவர் அணிந்துநோக்கிய கண்ணடிகளின் நிறத்திற்கமைய ஆதபன் அவரவர்களுக்குத் தோற்றுகிறான். நிறமற்ற கண்ணடி யணிபவருக்குச் சூரியனும் நிறமற்ற ஜ்வலையாகத் தோற்றுகிறான். இந்த நியாயம்பற்றியே, நிஷ்களங்க மனதுடைய ஞானி ஒருவர்- அவர் எம்மைப்போன்ற மனிதனுயினும்- நிஷ்களங்கமற்ற பரிபூரணரான இறைவனை எங்கணும் காண்கிறார். என் அப்படியான தோற்றமாக இறைவனைக்காண்

தொடர்ச்சி 3-ம் பக்கம்,

[பதிப்புரிமை ஆசிரியருக்குரியது.]

இராமாயணம்

## ஆரணிய காண்டம்.

### முதல் அங்கம்.

#### எட்டாங் காட்சி.

(முற்றொடர்.)

சூர்ப்: அரசே, எம்மைப்போன்ற கற்புடை மகளிர் தாம் கொண்ட காதலை வெளியிடப் பெரிதுங் கூசுவர்; ஆதலால் நானும் இதுகாறும் என்னெக்கத்தை வாய் திறந்து சொல்லக் கூசினேன்; துரையே, தனித்த பெண்பேதையாகிய என்னை அந்த மன்மதன் இரக்கமின்றி வருத்துகின்றான்; அக்கொடியவன் என்னை இம்சிக்காதபடி என்னைக் காத்தருளவேண்டும்.

இரா: (கேட்டமாத்திரத்தே வெறுப்பு சினம் முதலியன உடையவராய் தனக்குள்) இவள் தோற்றுகின்றபடி ஒருபதிவிரதை யல்லள்; இவள் நோக்கத்தை யோசிக்குமிடத்து இழிகுணமுடையவள்; வெட்கங்கெட்டவள்.

(என்று சொல்லிவிட்டு மௌனம் சாதிக்கின்றார்.)

சூர்ப்: (மௌனமாயிருப்பதைக் கண்டு அவருக்கும் உடன்பாடென எண்ணி அவரை நோக்கி) சித்திரம் வல்லுநராலும் தீட்டுதற்கரிய திருமேனியையுடையவரே, நீர் இங்கு எழுந்தருளியதை அடியாள் இதுவரையும் அறிந்திலேன்; இங்குள்ள முனிவர்கட்குக் குற்றேவல் செய்துகொண்டு நெறிதவறாது எனது அழகும் நலனும் அவமே கழியக்காலம்போக்கினேன்; வள்ளலே என்மீது கருணைபுரியவேண்டும்.

இரா: (ஓகோ இவள் விபரீத எண்ணங்கொண்டு இங்குவந்தனள்போலுமென்றெண்ணி அவளைப்பார்த்து) பெண்ணே, நீயோமுதன்வரு ணத்தவராகிய பிராமணகுலத்திற் பி... துள்ளாய், யான் இரண்டாம் வரு... மாகிய அரசகுலத்தவன்; ஆதலால் இ... வருக்குமிடையில் மணம் இசையா... நீகொண்ட நோக்கமும் முறையானதல்...

சூர்ப்: ஆடவர் திலக, பார்ப்பனக்கன்... கைக்கும் அரசகுமாரனுக்கும் கடிமண... இசையாதென்றீர்; என்பிதாவெனிலோ... வேதப்பிராமணன்; என்தாய் இராக்க... குலத்திற் பிறந்தவள்; இவர்கள் ம... முடித்துப்பெற்றபிள்ளைகளே இராவணே... சுரன் முதலிய நாங்களாவோம்; அன்... யும் அரக்கனென்னுங் கொடியவனுக்... அஞ்சி வந்து அடைக்கலம் புகுந்த ஏ... யாகிய என்னை நீர் காவாதொழிவீரே... பெண்பழியொன்று உம்மைச்சூழுமெ... பதை அறிந்து கொள்ளுதிர்.

இரா: (அகவே... சிறிது வேடிக்கையாக வார்... தையாடவிரும்பி) அரிவையே நீயோ வல்... மையிற் சிறந்த அரக்கர்குலத்திற் பிற... துள்ளாளை; யான் மானுடன்; இங்ஙனமா... னல் உனக்குமெனக்கும் சம்பந்தம் எப்... படிப் பொருந்தும்?

சூர்ப்: (தனக்குள், ஐயையோ, நான் முந்தியே... இராவணன் தங்கையென இவருக்குச்சொன்... னது புத்தியீனமன்றோ பின் அவரை... நோக்கி) நான் அரக்கர்குலத்திற்பிறந்துள்... ளேனுயினும் அவ்வரக்கரை வெறுத்து... முனிவரையடைந்து அவர்க்குக் குற்றே... வல் செய்து பரிசுத்தமடைந்துள்ளே... னென்பதை முன்னரும் உமக்குச்சொல்லி...

தொடர்ச்சி 3-ம் பக்கத்தில்.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஆங்கிரசஹு ஆடிமீ உசஉ திங்கட்கிழமை.


## ஐயோ! யிற்றில் அடிக்கலாமா?

2

இலங்கையில் வந்து இறக்குமதியாகும் தான உணவுப்பொருளாகிய அரிசி நெல் ன்னுமிவைகளில் வரிவிதிக்க தேசாதிபதி காண்ட நோக்கம் தவறென்பதைச் ன்ற பிரசுரத்தில் ஒருவாறு எடுத்துக்காட் னேம்; இனி அரசாங்கசபை மந்திரிமாரும் ங்கத்தவர்களும் பரிபாலனச் செலவிற்குப் ணத்தை யீட்டும் விஷயத்திற் கூறுவதைச் சிது ஆராய்வேம். அரசாங்க உத்தியோ ம் பார்த்து இளைப்பாறுவோருக்கு, இளைப் றும் போது, பத்துவருடகாலத்திற்குரிய பகார வேதனத்தைக் கணக்குப்பார்த்து த்தொகையில் நாலிலொருபங்கை ஒரு தாகையாகத் திரட்டி ஆரம்பத்திலேயே அர னர் கொடுப்பது வழக்கம். இதனையே கம்யூட்டற் பென்ஷன்" என்று சொல்வர்; ந்தத் தொகையான உபகாரவேதனத்தை ப்பணமுட்டுக்காலத்தில் திரட்டிக்கொடுக் ாமல், மாசம் மாசம் உபகாரச் சம்பளத் தைக் கொடுத்துவந்தால் அரசினருக்கு ஒரு பருந்தொகை எஞ்சுமென்பதும் அந்தத் தாகை பரிபாலனச் செலவில் ஏற்பட்ட ணக்குறைவை நிவிர்த்திசெய்யப் போதிய ாகுமென்பதுமே மந்திரிமார் அங்கத்தவர் ள் என்னுமிவர்களுடைய கொள்கை; இக் கொள்கை மிகவும் நீதியானது; எவர்க்கும் பெரும் நஷ்டஞ்செய்யாதது; இப்போது நேர்ந் துள்ள இப்பணமுட்டினைத்தோற்றுமல்மேல் லக் கழியச் செய்பத்தக்கது; ஆனால் இப்படி பானபிரேரணை நமது தேசாதிபதிக்குச் சம்மத மில்லை; அவர் சம்மதியாமைக்கு ஏது என்ன என்பது வெளிப்படையாகப் புலப்பட வில்லை. ஆனால் இந்த ஒழுங்கினால், சிறிது நஷ்டப்படக்கூடியவர்கள் இலங்கையில் உத்தியோகம்பார்த்து இளைப்பாறி மீண்டு தம் நாடுகளுக்குச் செல்லும் அயிரோப்பிய உத்தி யோகத்தர்களேயாவர்.

அயிரோப்பியர் சிலர்க்குமாத்திரம் நேரக் கூடிய அற்ப வசதியீனத்தை, நாடு சங்கடப் படும் இந்த நேரத்தில் எவரும் பார்க்கக் கூடாது. பணமுட்டு நீங்கி பழைய நிலை மையை இந்நாடு அடையுங்காலத்தில் இந்த மாறுதல்களையும் வசதியீனங்களையும் அர சினர் நீக்கிக்கொள்ளலாந்தானே; தேசாதி பதிகொண்டுள்ள பொருந்தாநோக்கமும், பிடி வாதமும், இந்நாட்டவர்களிடத்து அவர் கொண்டுள்ள பராமுகத்தோடு தந்நாட்டவர் களிடத்துக் கொண்டுள்ள அநுதாபத்தையும் ஒருவாறு காட்டுகின்றதெனலாம். பூமரத்தி லுள்ள பூவைக் கொய்வதேயல்லாமல் அம் மரத்தை வேரோடு களைதல் புத்தியாகுமா?

இங்குள்ளாரெவர்க்கும் இன்றியமையா உணவுப்பொருளாகிய அரிசி நெல்லில் வரி விதிப்பதை விடுத்து, நமது தேசாதிபதி செல் வர்கள் மாத்திரம் மேலதிகமாக வாங்கி உப யோகிக்கும் பொருள்களாகிய அந்நியநாட்டி லிருந்து வரும் பழங்கள், பெற்றல்கள், தகரத் தில் வரும் ஆகாரங்கள், மதுபானங்கள், முத லிய இவைகள்மீது வேண்டியமட்டிற்கும் வரி விதிக்கலாகும். இவைகள் சீவியத் திற்கு இன்றியமையாதன அல்லவே. அர சாங்க அயிரோப்பிய உத்தியோகத்தர்க ளுடைய பிரயாணச்செலவிற்கு உதவப்படுந் தொகை, உத்தியோகத்தர்களுக்கு உதவப் படும் விடுதலைநாட் பிரயாணச்செலவு என் னும் இவைகளையுங் குறைக்கலாகுமே.

இந்த விஷயமாக நாம் சொல்லத்தக்கது அரசாங்கசபை மந்திரிமாரும் அங்கத்தவர் களும், தங்கள் பதவிக்குத்தான் இடையூறு வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது உண் மையாக நம் நாட்டிற்கு நன்மைதரும் இந்த விஷயத்தில் தேசாதிபதிக்கு இடங்கொடுக்க வொண்ணாதென்பதே.

"செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்க லாதார்."

## வல்லை வெளியிற் சிங்களப் பெண்ணின் கொலை.

(குறுக்கு விசாரணை.)

(1) நாவிதன் ஞானமுத்து, (2) கயித்தான் இளையவன், (3) நாவிதன் கணபதி என்னும் மூவர் எல்ஸி என்னும் ஒரு சிங்களப் பெண்ணைக் கொலைசெய்தனரென்று குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பிரத்தியேக நீதிபதியாகிய மிஸ்ரர் சைமன் டுரூட்றிகோ என்பவரால் விசாரணை செய்யப்பட்டது. முதலாமெதிரியாகிய ஞானமுத்து என்பவனுக்கு நியாயதுரந்தரர் ஸ்ரீ G. G. பொன்னம்பலமும், ஸ்ரீ K. V. சின்னத்துரையும் ஏற்பட்டனர். இரண்டாம் எதிரியாகிய கயித்தான் இளையவன் என்பவனுக்காக ஸ்ரீ K. V. சின்னத்துரையும், மூன்றும் எதிரிக்காக மிஸ்ரர். C. L. செல்வரத்தினமும் ஏற்பட்டனர்.

குறுக்கு விசாரணையில் மோட்டர் ரதச் சாரதி K. முருகேசு சொன்ன சாட்சியம்: ஜூன் மாதம் 22-ம் தேதியன்று இரவு 8-30 மணியளவில நான் "பயஸ்கோப்" பார்க்கச் சென்றிருந்தேன். அக்நேரம், முதலாம் எதிரியாகிய ஞானமுத்தனின் சாய்ப்பின் கதவுகள் திறந்தவண்ணம் இருந்தன. உள்ளே மின்சார தீபங்கள் எரிந்துகொண்டிருந்தன; நான் சாய்ப்பு விறுந்தையில் நின்றபோது உள்ளே ஒரு சிங்களப்பெண் நிற்பதைக் கண்டேன். நான் அவளை வாசலில் உள்ள மறைப்புக்கூடாகப் பார்த்தேன். இதன் பின், ஞானமுத்தன் என்னிடம் வந்து "ரோயல்தியேற்றர்" எனப்படும் நாடக மண்டபச் சந்திக்குக் கூட்டிக்கொண்டு போனான். அங்கு ஒரு மோட்டர் ரதம் நின்றது. நான் அதற்குள் ஏறினேன். அது ஆருடைய ரதம் என்று நான் எதிரியைக் கேட்கவில்லை. நான் அந்த ரதத்தை முதலாம் எதிரியின் சாய்ப்பிற்குச் செலுத்திக்கொண்டு போனபோது வீதியில் தீபங்கள் எரிந்துகொண்டிருந்தன. மோட்டர் ரதத்தில் இந்த மூன்று எதிரிகளும் ஏதோ ஒரு மூடையை வைத்தனர். அப்போது நான் இது என்ன மூடை என்று கேட்கவில்லை. அந்த நேரத்தில் மோட்டர் ரதத்தில் இவர்கள் எங்கு போகின்றார்கள் என்று நான் சந்தேகப்படவில்லை. நிலாவரைக்கு ரதத்தைச் செலுத்தும்படி முதலாம் எதிரி கூறினான். நிலாவரைக் குளம் மிக்க ஆழமானது என்று எனக்குத் தெரியும். நிலாவரைக்குளத்தில் இதற்கு முன்னர் பல கொலைகளும் தற்கொலைகளும் நேர்ந்திருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். முதலாம் எதிரி எனக்கருகில் உட்கார்ந்திருந்தான். நிலாவரைக்குப் போகும் மார்க்கத்தில் நான் எதிரிகளில் எவரோடாயினும் வார்த்தையாடவேயில்லை. நிலாவரைக்கு இப்பால் ஒருமைல் தூரத்தில் நான் மோட்டர் ரதத்தை நிற்பாட்ட முதலாம் எதிரி என்னை நோக்கி, ரதத்தைத் திருப்பி வல்லைப் பாலத்திற்குச் செலுத்து என்று கூறினான். அப்போதும் நான் ஒருவிதமான சந்தேகமும் கொள்ளவில்லை. வல்லை வெளியிலும் கொலைகள், வழிபறிக்கொள்ளைகள் முதலாயின நடந்திருக்கின்றன என்பதை நான் அறிவேன். நான் ரதத்தைச் செலுத்தி வல்லைப்பாலத்தடியில் நிற்பாட்டினேன்.

மிஸ்ரர் பொன்னம்பலம்: வல்லைவெளியை இங்கிலாந்தில் உள்ள 'புறாக்லாண்ட்ஸ்' என்ற இடத்திற்கு ஒப்பிடலாம். ஐயா, இந்தச் சாட்சிக்காரன், அன்றைய தினத்தில் அந்த மோட்டர்ரதத்தைச் செலுத்தவில்லையென்றும், இவன் யாரோ சிலரின் தூண்டுதலின்பேரிலேயே இச்சாட்சியத்தைக் கூறுகின்றான் என்றும் நான் கூறுகிறேன்.

மிஸ்ரர் போர்ண்ணடோ (பொலிஸ் பரிசோதகர்): ஐயா, "தூண்டுதலின் பேரிலேயே" என்பதன் கருத்து எனக்கு விளங்கவில்லை.

ஸ்ரீ பொன்னம்பலம்: ஓர் அகராதியைப் பார்ப்பின் அச்சொல்லின் கருத்தை நீர் அறியலாம்.

மிஸ்ரர் போர்ணண்டோ: அகராதியைப் பார்க்கும்படி எனக்குக் கட்டளை யிடுபவர் நீரல்ல.

குறுக்குவிசாரணையில் சாட்சி மேலும் கூறியது: இருட்டாயிருந்தபடியால் பாலத்தின்மேல் என்ன நடந்ததென்பதை யான் சொல்ல முடியாது. யான் மோட்டர்ரதத்தைத் திருப்பிக்கொண்டுவந்தபின் எல்லா எதிரிகளும் அதற்குள் ஏறியிருந்தனர்.

மிஸ்ரர் போர்ணண்டோ: நியாயதுரந்தர் சாட்சியத்தை மறைத்துவிடப் பார்க்கின்றார்.

ஸ்ரீ பொன்னம்பலம்: "மறைத்துவிடப் பார்க்கின்றார்" என்ற பதத்தை பரிசோதகர் தவிர்த்துவிடவேண்டுமென யான் கேட்கிறேன்.

மிஸ்ரர் வேர்ணன்டோ: நான் தவிர்க்கமாட்டேன்.

ஸ்ரீ பொன்னம்பலம்: காக்கியுடையணிந்த இந்தப் பொலிஸ் உத்தியோகத்தரைப் பற்றிச் சிந்திக்கமாட்டேன்; நான் அவர்களைப் பாவாய் பண்ணமாட்டேன்.

மிஸ்ரர் வேர்ணன்டோ: நானும் இந்தக் கறுத்தச் சட்டையணியும் இவரைப் பாவாய் பண்ணமாட்டேன்

ஸ்ரீ பொன்னம்பலம்: இந்தச் சப்பாத்திற்குள் தம்காலைப் புகுத்தியதும், இப்பொலிஸ் உத்தியோகத்தர்கள் தம்மைப்பற்றி அதிகம் எண்ணிக்கொள்ளுகின்றனர்.

சாட்சியான முருகேசு மேலும் கூறியதாவது:- இந்த எதிரிகள் கொண்டுவந்த பொதியிற்குள் என்ன இருக்கிறதென்று நான் அவர்களைக் கேட்டேன்; அதற்கு சிலகளவுப் பொருள்கள் இருக்கின்றன வென்றும் அவற்றைப்பற்றிய கவலை எனக்கு வேண்டாமென்றும் அவர்கள் எனக்குக் கூறினார்கள் அந்தக்களவுப் பொருள்களை ஏன் வல்லைவெளிப்பாலத்திற்குக் கொண்டுபோகின்றீர்கள் என்றுயான் கேட்கவில்லை. அதன்பின் நான் இரதத்தைச் செலுத்திக்கொண்டு முன் இருந்த இடத்தில் விட்டேன் அதன்பின் நான் முதலாம் எதிரியைப்போய்க்காணவில்லை. ஜூலைமீ 21உ பொலிஸ் அதிகாரிக்கு நான் ஒரு வாய்பிறப்புக் கொடுத்தேன்.

சாட்சி மற்றைய நியாயவாதியால் விசாரிக்கப் பட்டபின விசாரணை இந்த 9-ம் தேதிக்குத் தவணையிடப்பட்டது.

## யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை.

மேற்படி சபையாரின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இந்த 1932-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 2உ பிற்பகல் 4 மணியளவில் "இந்துசாதன"க் காரியாலயத்திற் கூடும்.

நிகழ்ச்சிகள்.

1. காரியதரிசியின் அறிக்கையை ஏற்றல்.
2. தனாதிகாரியின் வரவுசெலவுக் கணக்குப் பத்திரத்தைப்பற்றி ஆராய்தல்.
3. வருகிற வருடத்துச் சபை உத்தியோகத்தர்களைத் தெரிதல்.
4. முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறு ஏதம் கருமங்களைப்பற்றி ஆராய்தல்.

V. K. ஞானசுந்தரம்,
கௌரவ காரியதரிசி.

வண்ணார்பண்ணை,
31-7-32.

குறிப்பு: தங்கட்டணப்பணத்தைக் கொடுக்காத அங்கத்தவர்கள் தங்கள் அபிப்பிராயத்தைத்தெரிவித்தற்கு இடம்பெறார். ஆதலால் குறித்த திகதிக்குள் அவரவரால வரவேண்டிய கட்டணங்களை சபைத் தனாதிகாரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

## நீராவியடியிற் சண்டை.

சென்ற சனிக்கிழமை (6-8-32) பிற்பகல் 3 மணியளவில் வண்ணார்பண்ணை நீராவியடிப் புகைரதப்பாதைக் கருகாமையில் மணியர் சின்னவர் என்பவனும், சின்னத்தம்பி கந்தையா என்னும் ஓர் பள்ளனும் அபாயகாமான காயங்களுடன் கிடக்கக்காணப்பட்டனர். விசாரணையின்போது, மேற்படி கந்தையா, மணியர் சின்னவர் தன்னைச்சூது விளையாட வரும்படி கேட்டானென்றும், தான் மறுக்க அவன் கோபங்கொண்டு கத்தியாற் குற்றினனென்றும், கூறினான். தனக்குச் சாட்சிகளாக நாகர் சோமு, ஆறுமுகம் நாகமுத்தன், வல்லி நாகநாதி, சி. கணபதிப்பிள்ளை என்பனவோருடன் இன்னும் சிலரையும் குறித்தான்; மணியர் சின்னவர் தான் கணபதிப்பிள்ளை என்னும் ஒருவர் வீட்டில் கந்தையன், சோமு, நாகமுத்தன் நாகநாதி, சண்முகத்தான் முதலிவர்களுடன் சூது விளையாடிக் கொண்டிருந்த போது ஏதோ வாக்குவாதம் நிகழ்ந்ததென்றும், தன்னை கந்தையாவின் சாட்சிகளான நாகர் சோமு, நாகநாதி இளையவன் முதலானவர்கள் வாளுகப் புடைத்தனரென்றும், தான் ஸ்மாரணையற்றுக் கீழ் வீழ்ந்ததாகவும், அதன்பின் ஒன்றும் தெரியாதென்றும் தான் கந்தையனைக் குற்றவில்லையென்றும் கூறினான்.

கந்தையா என்பவனுடைய தேகத்தில் 7, 8 கத்திக்காயங்கள் காணப்பட்டன. மார்பில் உள்ளகாயம் அபாயகாமானதென்று சொல்லப்படுகிற்து.

## வதுளை ஸ்ரீ ஆனந்தவடிவேலாயுத சுவாமி இரதோற்சவம்.

ஊவாமாகாணத் தலைநகரமாகும் வதுளை நகரில் நாட்டுக் கோட்டை நகரத்தாரால் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆனந்த வடிவேலாயுத சுவாமிக்கு நிகழும் ஆங்கிரசஹு ஆடிமீ 28-ம் திகதி (12-8-32) சுக்கிரவாரமும் ஏகாதசி திதியும் மூல நக்ஷத்திரமும் அமிர்தசித்தயோகமுங் கூடியசுபதினத்தில் அலங்கார அபிஷேக ஆராதனைகளும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானமும் நடத்தி, அடுத்த நாளாகிய ஆடிமாதம் 29-ம் திகதி (13-8-32) மந்த வாரமும் துவாதசித்திதியும் பூராட நக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் பகல் உபயஸ்தலமாகிய செல்வவிநாயகர் மடாலயத்திற்கு சர்வ அலங்கார இரதாரூடராய் அடியார்களுக்கு அனுக்கிரகக்காட்சி கொடுத்து எழுந்தருளினர்.

30-ம் திகதி (14-8-32) பானு வாரமும் திரயோதசித் திதியும், உத்தராட நக்ஷத்திரமும் அமிர்தயோகமுங் கூடிய சுபதினத்தில், அபிஷேக ஆராதனையும், அன்னதானமும், திருவூஞ்சலும் நடத்தி அளவற்ற பேரானந்த மகிழ்ச்சியுடையவர். மறுநாளாகிய 31-ம் திகதி (15-8-32) சோமவாரமும் பூரணைத் திதியும் திருவோண நக்ஷத்திரமும் அமிர்தசித்தயோகமுங் கூடிய சுபதினத்தன்று பிற்பகல் சர்வாலங்காரதோடும் இரதாரூடராய் திருவோலக்கமா யெழுந்தருளி வந்து தமது திருக்கோவிலில் வீற்றிருந்தருளுவர். —நடித.

## காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் ஸ்ரீ வை. கந்தையா அவர்கள்.

இவ்வண்ணார்பண்ணையிற் சிறந்த தமிழ் வைத்தியர்களுள் ஒருவராக விளங்கிய ஸ்ரீ வை. கந்தையா அவர்களின் தேகவியோகத்தைச் சென்ற திங்கட்கிழமை (1-8-32) வெளிவந்த பத்திரிகைப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளோம். இவருடைய ஈமக்கிரியைகள் தமயனாகிய வைத்தியர் ஸ்ரீ வை. சபாபதியவர்களாற் செய்யப்பட்டன. ஸ்ரீ கந்தையா அவர்களின் மரணத்தைக் கேள்வியுற்று வருந்தாதார் எவருமில்லையெனலாம். வைத்தியர்கட்கு ஆவசியகம் வேண்டியுள்ள பல குணங்களுஞ் செயல்களும் ஸ்ரீ கந்தையா அவர்களிடம் இயல்பாகவே காணப்பட்டன. காருண்ணியம், நோயாள ரெல்லாரையும் ஓரேவகையாக வைத்து நடத்துதல், குறித்த குறித்த நேரத்தில் குறித்த குறித்த நோயாளரைச் சென்று பார்த்தல், ஆபத்திற்கு உதவுதல் முதலாங் குணங்கள் நற்செயல்கள் இவரிடத்தில் என்றுமுள்ளன. இனி இவர் எந்தநேரமும் முகமலர்ச்சியோடும், உற்சாகத்தோடும் ஊக்கமான வார்த்தையோடுங் காணப்படுதலால் இவரைக் காணவே நோயாளருக்குப் பெரும் ஆறுதல் உண்டு. ஏழைகளாயினுஞ் செல்வர்களாயினுங் கொடுத்ததை வாங்கிக்கொள்ளும் பெருந்தன்மை விசேஷமாக இவரிடத்தில் உண்டு. பரம ஏழைகளாயுள்ளவர்கள் ஏதும் ஔஷதக்கிரயம் வேதனம் கொடுத்தால் அதனை அந்த நோயாளிக்கே செலவிடும்படி, கொடுத்தவர்களிடம் மீட்டும் இவ்வைத்தியர் கொடுத்ததை இவ்வியாசத்தை எழுதும் நாம் பலமுறை நேரிற் பார்த்துள்ளோம்.

சிறுபிள்ளைவைத்தியம், கர்ப்பிணிகள் வைத்தியம், மேகநோய்கட்கு வைத்தியம், சுரநோய் வைத்தியம் என்னுமிவைகளில் ஸ்ரீ கந்தையா அவர்கள் சிறந்தவரென்பது உலகப் பிரசித்தம். நெருப்புச் சுரத்தாற் பீடிக்கப்பட்டு ஆங்கில வைத்தியர்களாற் கைவிடப்பட்டோர் பலரை எவரும் ஆச்சரியமடையும்படி இவர் சுகப்படுத்தியுள்ளார். இதனை எழுதும் யாம் இருமுறை கொடிய நெருப்புச்சுரத்தாற் பீடிக்கப்பட்டு ஆபத்தான நிலைமையிற் கிடந்து வருந்தியபொழுது இந்தப் புண்ணியவானே அந்நோய்வாயினின்றும் எம்மை மீட்டுதவியவர் என்பதைநாம் இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைநினைந்து வருந்தாமல்முடியாது. சுருங்கச் சொல்லுகில் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தம வைத்திய ரத்தினங்களுள் ஒன்றை இங்குள்ள நாங்கள் உண்மையாக இழந்துவிட்டோம். இவர் செய்துவந்த வைத்தியத்தை இவருடையதமயனாகிய ஸ்ரீ சபாபதியவர்களே அடிதவறாது செய்துவருகின்றார். வைத்தியர் ஸ்ரீ கந்தையாவை அகாலத்தில் இழந்து துன்புறும் அவரது மனைவி, புத்திரிகளோடும், சகோதரர், மருகர், சம்பந்திகள் முதலியோருடன் நாமும் பெரிதும் அநுதாப முறுகின்றோம்.

## கடவுளின் தன்மை.

1-ம் பக்கத் தொடர்.

றுர் எனில், அந்த ஞானியின் மனமும் நிஷ்களங்கமானதாலேயே யென்க.

ஓர் கொடிய மனிதன் இருக்கிறுன்; அவனுக்கு இறைவன் கொடியவராகவே தோற்றப்படுகின்றுர். ஏனெனில் அவனுடைய மனம் கொடியசிந்தைகள் உறையும் இடமாயிருத்தலினுலேயே என்க. உலகப் பொருள்களில் ஆசைவைத்து, அவற்றையே தஞ்சம் என இருப்பவர்க்கு இந்த உலகம்தான தெய்வம். எனவே நிஷ்களங்கமான, நிர்க்குணரான, சச்சிதானந்தரான இறைவனை ஒருவன் காண வேண்டுமாயின், அவன் தன்னுடைய ஹிருதயத்தை நிஷ்களங்கமானதாக வைத்திருத்தல் வேண்டும். இன்னொரு விஷயம். நாம் முன்னர் மூக்குக் கண்ணுடியைத் திருஷ்டாந்தமாய் எடுத்துக் காட்டினேம். ஆனுல் ஒரு சோடி கண்ணுடிகள் இன்னொரு சோட்டியுடன் பார்க்க வித்தியாசமானவையாய் இருக்கும். அவற்றை நாம் எப்படித் தேய்த்தாலும், அவை சுத்தமான பளிங்கென ஒளிவீசா. ஆனுல் எமது மனம இதுவிஷயத்தில் அப்படியல்ல. எமது மனமானது இயற்கையாகவே அழுக்குப்படிந்ததல்ல. அது இயற்கையாகவே மற்றவர்களின் மனத்திலும் பார்க்க வித்தியாசமானதும் அல்ல. செயற்கை வாசனையாலேயே எம்மனத்தில் அழுக்குப் படிந்திருக்கின்றது. அதனை, அதாவது அந்த அழுக்கை நாம் பிரயத்தனப்பட்டால், அகற்ற முடியும்.

அன்பேயுருவாய் அமைந்த ஓர் இறைவனை நாம் காணவேண்டும் என அவாவுடையவரானுல் நாங்கள எவ்வுயிர்க்கும் அன்பா யிருக்கவேண்டிய தாவசியகம. நீதியே வடிவாயுள்ள கடவுளை நாம் தரிசிக்கவேண்டுமாயின், நாமும நீதியுடையவராயிருத்தல் வேண்டும. உலோக வஸ்துக்களே யுருவாயுள்ள ஒரு இறைவனை நாம பார்க்கவேண்டுமானுல அது மிகவும் சுலபமாகும். நாம் பிரயததனபபடவேண்டியது இல்லை. ஏன்? நாங்கள் இப்போதும அவரை அவ்வண்ணமே நோக்குகின்றேம். எனவே கடவுள் என்ருல் என்ன என்று ஒருவர் ஒரு கேள்வி கேட்டால், கடவுள கடவுளேயன்றி வேறு அல்ல என்றே நாமவிடையிறுக்கவேண்டும். எவ்வண்ணத்தன் எங்கிருப்பவன் என்று கடவுளை நாம கூற முடியாது. அவர் வாசாமகோசரமானவர். எமமனத்தில் யாம எப்படி நினைக்கின்றேமோ அப்படியே அவர்எமக்குததோற்றுவார் ஓம தத்ஸத்.

## இராமாயணம்

### ஆரணிய காண்டம்.

1-ம் பக்கத் தொடர்.

யுள்ளேன்; ஆதலின் சாதிபேதம் எங்கள் கூட்டுறவிற்கு எவ்வகையான தடையாகவும் இருக்கமாட்டாது.

இரா: மங்கையே! உன் தமயன்மாருள் ஒருவன் திரிலோகங்களுக்குந் தலைவனுகிய இராவணேசுவரன், இன்னொரு தமயன் செல்வத்திற்குத் தலைவனுகிய குபேரன்; அவர்கள் உன்னைத் தாராதத்தஞ்செய்து தருவரேல் யான் ஏற்றுக்கொள்ளலாகும். அவர்களுடைய சம்மதமின்றி உன்னைப் பெண்ணுக ஏற்றுக்கொள்வதற்குப் பயப்படுகின்றேன்.

சூர்ப்: அரசரேறே, எண்வகையான மணங்களுட் காந்தர்வமென்ற மணமே க்ஷத்திரியகுலத்தார்க்கு விதிக்கப்பட்டது; இப்பொழுது அந்த முறைப்படி நாமிருவரும் மணஞ்செய்துகொண்டால், பின் என் அண்ணன்மாரும் அதனை அங்கீகரிப்பர்; அல்லாமலும் என் அண்ணன்மார் தாபதர்களோடு பெரும்பகைபூண்டுள்ளவர்கள்; நீரும் அத்தாபதவடிவந்தாங்கியுள்ளீர்; என்னை இப்பொழுதே கல்யாணஞ்செய்துகொள்வீரேல் தம் மைத்துனன் என்ற உரிமைபற்றி உம்மைப் பகைத்தலின்றி, சுவர்க்கஉலகபரிபாலனம் வேண்டினும் அதனை உமக்கு உதவி உம்முடன் நண்புபாராட்டி நடந்துகொள்வர்; ஆதலினுலே அரசே, என்னைப் புறக்கணித்தலின்றி ஆதரித்தல்வேண்டும்.

இரா: (சிரித்து) ஏ, கோதாய், இராக்கதருடைய தயவும் எனக்குக் கிடைத்தது; நீயும் எனக்குக் கிடைத்தனை; சுவர்க்கலோகம் முதலாம் மேலுலகங்களின் பரிபாலனத்தையும் பெறப் போகின்றேன்; எமது நாட்டைவிட்டு இங்கு வந்தபின் யான் பெற்ற பேறே பெரும் பேறு. பெண்ணே, நன்று!நன்று! நின்எண்ணம்.

(அச்சமயத்தில் சீதை அங்கே வருதலும் சூர்ப்பணகை அவளைக்கண்டு அற்புதமும் பொருமையுமடைகின்றுள்)

சூர்ப்: (தனக்குள்) இப் புண்ணிய புருஷன் தன் மனையாளை யொருபோதும் இந்தக் கானகத்திற்கு அழைத்து வந்திருக்க மாட்டான்; இவளோ திருமகள்போல் வந்து நிற்கின்றுள்; பெண்ணுகப் பிறந்த நானே இவளுடைய பேரழகில் ஈடுபடலானேனென்றுல், ஆடவர் இவளைக் காணில் என்னபாடுபடுவர்! இந்த வநிதையின் தயவு இப்புருஷோத்தமனுக்குக் கிடைத்துளதென்றுல் என் போன்ற பெண்களை இவன் கண்ணெடுத்துப் பார்ப்பானு; கருப்புண்டார் வேம்புண்ண விரும்புவரோ! ஐயையோ, வயிறு பற்றியெரிகின்றதே; இடையில் வந்த இந்த மெல்லி நல்லாள், யான் காதலித்த ஆடவர் திலகனுடன் முன் பயின்றுள்போல் நாணமின்று அணிமையிற் சென்று நிற்கின்றுளே; இதனையும் நான் கண்ணுற் பார்த்துக்கொண்டு இங்கே நிற்க முடியுமா; முந்தி இங்கே வந்த நான் இப்பேரழகனை இத்தனை நேரமும் இரந்துகொண்டு நிற்க, பிந்தி வந்த இவள் சொந்தம் பாராட்டி, கற்பகதருவில் தாவிப்படரும் காமவல்லிக்கொடிபோலப் போய் அணைந்து நிற்கின்றுளே; இருவரும் பரஸ்பரம் ஆர்வத்துடன் நோக்குகின்றுர்களே; இவள் வந்தபின் என் காதலன் என்னைக் கண்ணெடுத்துப் பார்க்கின்றுனுமில்லையே. ஐயோ! விதியே, இராவணன் தங்கையைப் புறக்கணிக்கவும் இடையில் வந்த இவளை இப்புருஷன் கடைக்கணிக்கவும் வைத்தாயே! நான் இராவணன் றங்கையென்பது மெய்யானுல் இவளையும் இவனையும் இப்பொழுதே பேதஞ்செய்து விடுகிறேன். (ஸ்ரீராமரை நோக்கி) என்னுயிர்த்தலைவரே! இடையில்வந்தஇவளைச் சமீபத்தில் வரவொட்டாது துரத்திவிடுதிர்; இவள் யாரென்பதை நீர் அறியமாட்டீர்; ஆனுல் நான் நன்கறிவேன்; இவள் இக்காட்டிற் சஞ்சரிக்கும் ஒரு நீலி, மாயத்தில் வல்ல கொடிய அரக்கி, இவள் கொண்ட இந்த அற்ப அழகோடுகூடிய வடிவம் நிசமானதல்ல; இந்த வஞ்சகி இக்காட்டில் நீடித்தகாலஞ் சஞ்சரித்துத் தன் மாயத்தில் உம்மைப்போன்ற உத்தம புருஷர் பாலரை மோசஞ்செய்துள்ளாள்; மோசத்திற்குக் காரணியாகிய இத்துஷ்டையை அடித்துத் துரத்துதிர்; என் போன்ற கற்புடைய மகளிர் இவளைக் காணின் அஞ்சுவர்; என் அரசே காலதாமதஞ் செய்யாதிர்.

இரா: ஏ, பேதாய், இவள் உன் கண்களுக்கு அரக்கிபோலவா புலப்படுகின்றுள்? நன்று நன்று, நின்கூற்று, உன் வார்த்தையால் நீ எப்படிப்பட்டவளென்பதை இப்பொழுது உணர்ந்தேன்; நீ இவ்விடம் விட்டுச் செல்லுதல் நல்லது.

சூர்ப்: (தனக்குள்) ஐயோ, இந்த மாற்றவள் வந்த பின்பே இவர் என்னை வெறுத்து வார்த்தையாடுகின்றுர்; இவளை இவ்விடத்தினின்றும் அகற்றல் வேண்டும். (சீதையை நோக்கி) எடி அரக்க மகளே, நானும் என் காதலரும் சல்லாபமாகப் பேசிக்கொண்டு நிற்கும்போது, சமையந் தெரியாமல் நீ ஏன் இங்கு வந்தனை; இந்தக்ஷணமே இவ்விடம்விட்டு ஓடிப் போகுதி இல்லையேல் நானே உன்னைத் துரத்திவிடுவேன்.

(அதன் இப்படிக்கூற சீதை அஞ்சி இராமரிடம் ஒதுங்கி நின்றுள்)

இரா: ஏ, வஞ்சமகளே, உன்னைக் கண்டு என் தேவி அஞ்சுகின்றுள்; அல்லாமலும் என் தம்பி உன்னைக் காண்பனேல் நீ உன்னுயிர் காணமாட்டாய்; விரைவினில் இவ்விடம்விட்டு அப்பாற் போகுதி.

சூர்ப்: என்துரையே, இந்திரன் முதலாந் தேவர்கள் தாமும் என்னைப் பெற்றுக் கொள்வதற்குத் தவஞ் செய்கின்றுர்கள். அப்படியிருக்க நீர்மாத்திரம் இந்தக் கள்ளியை இச்சித்து என்னைப் புறக்கணிக்கின்றீர். இது உம்மையொத்த ஆடவர்க்குத் தருமமாகுமா?

இரா: (தனக்குள்) இவளைப் போஎன்றுசொன்னுலும் போகின்றுளில்லை;. இவ்வுளுத்தப் பெண்ணோடு இன்னமும்நின்றுவார்த்தையாடின் தீமைவரினும் வரும். பயிற்சி மடவார் பழகுதல் வேண்டா என்பர்..... கண்ணே ஜாநகி, வருதி

(என்று கூறி சீதையுடன் ஸ்ரீராமர் பன்னசாலையினுள்ளே செல்கின்றுர்)

காட்சி முற்றும்.

## வாராந்த வாக்கியத் திரட்டு.

### பணமுட்டால் வந்த பயன்.

"பணமுட்டுத் தொழிலின்மையென்பன நடமாடும் காலம் இது; சட்டத்திற்குப் பயந்து நீதிக்கடங்கி வாழும் மக்களிற் பலரை பட்டினி வாட்டுகிறது. இந்தப் பட்டினியால், தம்மிலும் பார்க்கச் சிறிது உயர்ந்த நிலைமையில் உள்ளவர்களிடம் இருந்து திருடுவதற்குப் பசியால்வாடும் மக்கள், அவர்கள் எச்சாதியாராயினும் சரி, எச்சமயத்தாராயினும் சரி, ஒன்றுகச் சேர்ந்து தம் தீத்தொழிலை ஆற்றிவருகின்றனர்."

—மிஸ்டர் R. F. டயஸ்,
சிலாபம் டிஸ்திறிக் நீதிபதி.

* * *

### தேசீய உணர்ச்சியை அடக்கலாமா?

'அடக்கப்பட்ட, நசிக்கப்பட்ட தேசிய உணர்ச்சி ஒழுங்கான முன்னேற்றத்துக்குத் தடையாகவிருக்கும். தேசிய வுணர்ச்சியை அலட்சியம் செய்வதென்பது முடியாத வேலை"

—சேர் மல்க்கோம் ஹெயிலி
(இந்திய ஐக்கியமாகாணத் தேசாதிபதி)

* * *

### சங்கீதம்.

"தேசிய சங்கீதம் நமது நாட்டு ஆண் பெண் பள்ளிக்கூடங்களில் கட்டாயப்பாடமாக ஏற்படுத்தவேண்டியது ஆவசியகம். பள்ளிக்கூடப் பாட அட்டவணையில் இது முதலிடம் பெற வேண்டும். நுண்ணறிவைப் பெருக்குவதற்குச் சங்கீதத்திற்குமட்டுமே வல்லமை உள்ளதால் அஃதொழிக்கப்பட்டமுறை கல்வியாகாது"

—ஸ்ரீமதி மா. மகேஸ்வரிதேவி.

* * *

### பரிபாலனப் பொறுப்பு எமக்குரியதே.

"100 வருஷமானுலும் நாம் குடியேற்றநாட்டந்தஸ்துப் பெறப்போவதில்லையென சேர் D. B. ஜெயதிலகா அவர்கள் கேலிசெய்ததை விட்டு நான் மனம் வருந்துகிறேன். 100 வருஷங்களாகச் சாவதானமாகக் கவனித்து வந்ததுபோகும். இனி நாம் தீவிரமாய் ஈடுபட்டாலும் சரி, சாவதானமாக நடுபட்டாலுஞ் சரி, இத்தேசத்தைப் பரிபாலனஞ்செய்யும் பொறுப்பு நமக்குரியதென்பதை வற்புறுத்தி வெற்றி பெற்றுத் தலைதூக்க யாவரும் முன்வரவேண்டும"

—மிஸ்டர் பிரான்சிஸ் டீ சொயிசா K. C.

* * *

### சர்வகலாசாலைகளும் நம் மாணவரும்.

"சர்வகலாசாலைகளில் மாணவர் தம் காலத்தைத் துர்வினியோகப்படுத்துகின்றனர். இந்திய மாணவர்களில் அநேகர் வெளித்தோற்றத்தில் ஆங்கிலேயர்களைப்போல் நடிக்க முயற்சிக்கின்றுர்களேயொழிய அவர்கள் ஆங்கிலருடைய சிறந்த குணங்களைக் கிரகிக்காதது வருந்ததமேயாம். ஆங்கிலேயர்களைப்போல நம் மாணவர்களும் கட்டுப்பாடாகவும் காலம் தவருமலும் ஒழுங்காகவும் தேசாபிமானத்துடனும் நடக்கவொண்ணுது. இவ்விஷயத்தில் மகாத்மா காந்தி அநேகலாக்காட்டிலும் சிறந்த ஆங்கிலரானவர்"

—ஆச்சார்ய சேர் P. C. ராய்.

* * *

### உண்மையிதுவே.

"எமது நாட்டின் மூலாதாரச் செல்வங்கள் யாவும் 6000 மைல்களுக்கப்பால் இருந்துவந்தவராகும் வெள்ளைக்கூட்டத்தாரால் சுரண்டப்பட்டுக்கொண்டே வருகிறது. இந்நாட்டுப் பொருள்களைச் சுரண்டுவதற்றேனே கண்ணும் கருத்து முடையவரேயன்றி இந்நாட்டு மக்கள் தம் நலனைக் கனவிற்றுனும் விரும்பாத ஒரு அந்நிய சாதியாரின் கீழ் அடிமைகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறேம். இத்தகையார்கள் எமது நன்மையை விரும்புவராவரோ? அன்னமாயின் இந்நிமிடமே எமது நாட்டை விட்டுத் தத்தம் மூட்டை முடிச்சுகளுடன் தந்தம் சொந்தநாடேகுவான்றே"?

—ஸ்ரீமதி. மா. மங்களம்மாள்.

* * *

"மக்கள் பிறக்கும்போதே குற்றவாளிகளாயும் பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைப்பவர்களாயும் பிறப்பதில்லை. அவர்களின் செல்வத்தைச் சுறையாடிவரும், அந்நியநாட்டு முதலாளிகளும் சுதேச முதலாளிகளுமே அவர்களைக் குற்றவாளிகளாக்குகின்றனர். அவர்களின் செல்வத்தை இப்படிச் சூறையாடுவதனுல், அவர்கள் வறியராகின்றனர். தங்கள் வறுமைப்பிணியைப் போக்குவதற்காக இம்மக்கள் மற்றையோரின் பொருள்களைத் திருடுகிறுர்கள். அப்படித் திருடும்போது பல சமயங்களில் அகப்படுகிறுர்கள். அகப்படுத்தியவன் எம்மை நீதிஸ்தலத்திற் கொண்டுபோய் விட்டுத் தண்டனை அளிப்பதற்கேதுவாயிருப்பானே என்று எண்ணித் தாம் தப்புவதற்காக அப்படி அகப்படுத்தியவனை அந்த வறியமனிதர் கொலைசெய்கின்றனர். இப்படித்தான் எம் நாட்டில் குற்றங்கள் அநேகமாக இழைக்கப்படுகின்றன. எனவே வறுமைப்பிணியே குற்றங்களுக்கு மூலகாரணம்".

—K. A. P. இராஜகருண.


# கவுண்மேந்துக்

## கொந்திருத்துக்குக் கொடுபடும்

# கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், கட்சத்திரம், 14 இஞ்சுப்பக்கா ஓடு முதலியன அடைமழைக்கும் கசியாது; அண்டப்பார்த்தாப்போலக் கூரையில் அடுக்கலாம். பாரங் குறைவு, பெலனதிகம்; கல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

பூ, சிங்கத்தலை, மயிலிறகு விசிறி, பூச்செடி, கலசமுடி, கோபுரமுடி முதலிய அழகான முகட்டோடுகளும், கண்ணுடி ஓடு, காற்ரேடு, விசாலமான வெளிச்ச ஓடு, அலங்காரமான சிறுதூண் கல்லுகளும, தழிவிசைக் கல்லுகளும்.

யாழ்ப்பாண நகர், கிட்டங்கித்தெரு

**316-ம் நம்பர் ஓட்டுச்சாலையிற்**

பெற்றுக்கொள்ளலாம்.

Y 28 31/5.


## அடைவுநகை விற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவு பிடிக்கும வல்வெட்டித்துறை ச. ஐயாத்துரை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1931-ம் ஆ. சித்திரைமீ

| இல. | ல. | ரு | ஊர் | பெயர் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|
| 2445 | 3 | 6 | வல்வெட்டித்துறை | செ. அந்தோனி | பொ தோடு சோடி 1 |
| 2470 | 3 | 6 | உடுப்பிட்டி | சி. இராசதுரை | சி வாளி சோடி 1 |
| 2479 | 3 | 10 | வல்வெட்டித்துறை | வ. சங்கரநமசிவாயம் | கீச்சி 1 |
| வைகாசி | | | | | |
| 2527 | 3 | 9 | வல்வெட்டித்துறை | ச. தங்கம் | பொ தோடு சோடி 1, மோதிரம் சோடி 1 |
| 2555 | 4 | 15 | „ | ச. மாரிமுத்து | ஒப்பின் தோடு சோடி 1 |
| ஆனி | | | | | |
| 2641 | 3 | 10 | உடுப்பிட்டி | சி. இராசதுரை | கைச்சங்கிலி 1 |
| 2648 | 4 | 8 | கெருடாவில் | மு. ஐயாத்துரை | இமிற் தோடு சோடி 1 |
| ஆடி | | | | | |
| 2694 | 3 | 7 | வல்வெட்டித்துறை | க. வண்ணமணி | சி கடுக்கன் சோடி 1 |
| 2699 | 4 | 65 | „ | ச. மாணிக்கம் | பதக்கமுள்ள அட்டியல் 1 |
| 2716 | 4 | 15 | „ | சிவக்கொழுந்து | இமிற் தோடு சோடி 1 |
| 2736 | 4 | 40 | „ | சி. வடிவேலு | மு அட்டியல் 1 |
| 2748 | 3 | 7 | கம்பாமூலை | ஆ. வேலுப்பிள்ளை | இமிற்தோடு சோடி 1 |
| ஆவணி | | | | | |
| 2771 | 3 | 7 | வல்வெட்டித்துறை | சி. தங்கம்மா | பொ தோடு சோடி 1 |

விற்பனவு.—ஆங்கிரசஹு ஆவணிமீ ௨௧ திகதிக்குச் சரியான (22-8-32) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் எடுபடாநகை பிறநீங்கலாக மிகுதி டெடி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

V. M. கந்தசாமி,
வெர்திஸ்பேஸ்த்தர்.

Mis 559 8, 11)

## காணிவிற்பனவு.

றயில்வே குட்செட்டுக்குச் சமீபமாக ஸ்ரான்லி றேட்டில் 3 பரப்புக்காணி விற்க நியமித்திருப்பதால், தேவையுள்ளவர்கள் என்னிடம் அதைப்பற்றிய விபரமெல்லாம் அறிந்துகொள்ளலாம்.

முத்தையா-ஆசைப்பிள்ளை,
பிறக்கிறுசி.

(Mis 556 1&4&8th)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்ற அடைவுபிடிக்கும் திரிகோணமலை 7 ம் செம்பர் சின்னக்கடைத் தெரு பெரியதம்பி தம்பு என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படிசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | ஃ | ரூ. | ச. | நகைகளின்விபரம். |
|---|---|---|---|---|
| | 1930-ம் ஆ. 9-ம் மீ | | | |
| 5244 | 11 | 32 | | பின்கோர்க்கியுடன் 6பட்டு மணிக்கோர்வை 1 |
| 5257 | 16 | 8 | | ஒரு கல்தோடு கூட்டம் 1 |
| 5259 | 17 | 20 | | பின்கோர்க்கியுடன் கரிச மணிக்கோர்வை 1 |
| 5277 | 24 | 6 | | செவ்வத்தித் திருகுபூ 1 |
| 5289 | 29 | 40 | | பின்கோர்க்கியுடன் கரிச மணிக்கோர்வை 1 |
| | 10-ம் மீ | | | |
| 5331 | 14 | 8 | | கம்பி சரைபடன் தோடு கூட்டம் 1 |
| 5372 | 24 | 10 | | பிள்ளை பவுண்காப்பு கூட்டம் 1 |
| | 11-ம் மீ | | | |
| 5401 | 4 | 40 | | பீலிக்காப்பு கூட்டம் 1 |
| 5420 | 11 | 50 | 04 | அமரிக்கன் டலருடன் சங்கிலி 1 |
| 5431 | 13 | 15 | 04 | வெள்ளி பாதசரம் கூட்டம் 1 |
| 5462 | 20 | 10 | | சாதா பதக்கமுடன் ஒலைச்சறடு 1 |
| | 12-ம் மீ | | | |
| 5516 | 3 | 50 | | பட்டணக்காப்பு கூட்டம் 1 |
| 5566 | 22 | 22 | | சிலமோதிரம் 1 கரிசமணிக்கோர்வை 1 |
| 5567 | 23 | 35 | | கொடியுடன் சவடி முகப்பு 1 |
| 5573 | 24 | 20 | | பொன் பூரான்ட்டியல் 1 |
| 5602 | 31 | 6 | | செவ்வத்தித் திருகுபூ 1 |
| | 1931-ம் ஆ. 1-ம் மீ | | | |
| 5616 | 3 | 12 | | டட்சாக்கு 1, கல்கொப்பு சிமிக்கி கூட்டம் 1 |
| 5621 | 5 | 15 | | சதா பதக்கமுடன் ஒலைச்சறடு 1 |
| 5630 | 6 | 9 | | 3 கல் சதாமோதிரம் 1 |
| 5651 | 13 | 30 | | திருக்கொண்டை மணிக்கோர்வை 1 |
| 5664 | 18 | 10 | 04 | பட்டணக்காப்பு 1 |
| 5695 | 26 | 110 | | பின்கோர்க்கியுடன் சங்கிலிக்கொடி 1 |
| | 2-ம் மீ. | | | |
| 5707 | 5 | 10 | | சிலமோதிரம் 1 |
| 5752 | 27 | 35 | | இமிற் கல் பதக்கமுடன் சங்கிலிபட்டியல் 1 |
| | 4-ம் மீ. | | | |
| 5820 | 8 | 30 | | கம்பிப்பூரான்ட்டியல் 1 |
| 5821 | 10 | 22 | 50 | பின்கோர்க்கியுடன்பொன் தாலிக்கொடி 1 |
| 5828 | 12 | 10 | 04 | கல்வைத்த தோடு கூட்டம் 1 |
| 5848 | 16 | 30 | 04 | மெழுகுடன் பட்டணக்காப்பு கூட்டம் 1 |
| | 5 ம் மீ. | | | |
| 5891 | 10 | 55 | 04 | பின்கோர்க்கியுடன் தாலிக்கொடி 1 |
| 5893 | ,, | 50 | | முளுப்பவுண் கோர்த்த கழுத்தச்சங்கிலி 1 |
| | 6-ம் மீ. | | | |
| 5941 | 7 | 100 | 04 | பூக்காப்பு சோடி 1 கம்பிப்பூரான்ட்டியல் 1 |
| 5949 | 10 | 38 | | முளுப்பவுணுடன் கழுத்தச்சங்கிலி 1 |
| 5950 | 12 | 80 | | சிக்கமுக்காப்பு சோடி 1 |
| 5962 | 17 | 20 | 04 | சிகப்புக்கல் தோடு கூட்டம் 1 |
| 5987 | 30 | 45 | 04 | ½ டலருடன் கழுத்தச்சங்கிலி 1 |

விற்பனவு:- ஆங்கீரச வருஷம் ஆவணிமாதம் 3 ம் திகதிக்குச்சரியான (18-8-32) வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எபேட்டரை புறக்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

வி பொ விசுவநாத உடையார்,
லெய்சிஸ்மேலதர்,
திரிகோணமலை.

(Mis 555. 4 & 8)


## மலையாளம் சில்க்.

2½-வீதி 5-நீளம் பட்டு 1-க்கு ரூ.1-8-0
ஷெ கம்பிக்கரை டசன் 1-க்கு ரூ. 15
3-வீதி 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ 3-8-0

S. K. R, வீவிங் பாய்க்டரி,
(Y. 30.) கோட்டார், திருவிதாங்கூர்.





தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்கமெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப்புகழ்பெற்றது மிகஇலேசானது, மலிவானது; ஒவ்வொரு ஓட்டிலும்குடை அடையாளம் விளங்கும். காங்கேசன் துறையிலே கவர்மக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(Y 29. 1 5 to 30-4 33)



உண்மைகள்
இரண்டு

ஒன்று நன்கு அறியப்பட்டது

மற்றது அத்துணை அறியப்படாதது

1. எவ்வகையான குத்து வலிகளுக்கும் உடம்பிலுள்ள உளைவுகளுக்கும் முதற்தரமான சிறந்த இந்திய சஞ்சீவி

## ‘லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்’

என்பது நன்கு அறியப்பட்டது

2. இது பாரத நாட்டிலேயே தயாரிக்கப்படுவதென்பது அதிகம் அறியப்படாதது; இந்த உண்மையையும இப்பொழுது எல்லாரும் அறிவார்களாக.

லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்,
& பர்மஸியூற்றிக்கல்ஸ் லிமிட்டெட்,
தபாற்பெட்டி 67,
சென்னை.

(C. 24 11-2-32—10-2-33)



## விளம்பரம்.

:o:

ஜவுளிவகையில்

## எல்லாவிதமான துணிகளும்

பெரியகடை, காங்கேயன்துறைத்
தெருவிலுள்ள எமது

## சில்லறைவிற்பனைக் கடையில்

தாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ஜவுளிகளும்,

## இலங்கையிற் செய்யப்பட்டன

என்பதற்கு உத்தரவாதம்.

மற்றைய விடங்களிலும் பார்க்க எமது ஜவுளிகள்

## குணத்தாற் சிறந்தன
## விலையாற் குறைந்தன.

இன்னும், ஒருமுறை வந்து பார்ப்பின்
இதனுண்மை நன்குபுலப்படும்.

## இலங்கை நெசவுத்தொழிற்சாலை
லிமிட்டெட்.

(Y 20)



## சாலாமிஸ்திரி லேகியம்.

:O:

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜனநலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித, கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா க0. கால்ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ பீ. சட்டம் இல்லாததினால் முன் மனிஓடர்அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு.
சிலோன்.

(Y 27. 31-12-32)



## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக்கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகசியாட்லாக்
இனம்
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாபபேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 17. 7 9 8-9-3


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.